கடிதத்தில் சென்னை உயர்நீதி மன்றம், மேற்படி திட்ட மனுவை 10—2—1971 அன்று தள்ளுபடி செய்துவிட்டதெனவும், அந்நிலத்தில் அரிசனங்களுக்கு வீடுகட்டுவதற்கான உத்திரவை பிறப்பிக்குமாறும் அரசிடம் கோரியதின் பேரில் அரசு தனது ஆணை 1334 (நிலை) தேதி 18—11—1971-ல் ரூ. 51,200 செலவில் 32 வீடுகள் கட்டுவதற்கான உத்திரவு பிறப்பித்துள்ளது.

திரு. மணலி. சி. கந்தசாமி : தலைவரவர்களே, கீழ்வெண்மணி சம்பவத்தின் தன்மையை வைத்துப் பார்க்கும்பொழுது, ஏற்பட்டிருக்கும் காலதாமதம் பெரிய அளவிற்கு சமுதாயத்திற்கு ஒரு வருத்தத்தை ஏற்படுத்தி விடுவதால், சீக்கிரமாக அதைக் கட்டுவதற்கு விசேஷ நடவடிக்கைகளை எடுக்க சர்க்கார் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : முதலில் இந்த இடம் வேண்டாம், வேறு இடத்திற்குச் செல்கிறோம் என்று பாதிக்கப்பட்ட குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் சொல்லிக் கொண்டிருந்தார்கள். எனவே, வேறு இடம் பார்த்துக் கொண்டிருந்தோம். பிறகு இதே இடத்திலே வீடு கட்டிக்கொடுங்கள், இருக்கிறோம் என்று சொன்னார்கள். அதற்காக இந்த இடத்தை எடுக்க முடிவு செய்த பிறகு, நிலத்தின் சொந்தக்காரர்கள் கொடுக்க மறுத்து உயர்நீதிமன்றத்திற்கு வழக்குக்குச் சென்றார்கள். வழக்கு தள்ளுபடி ஆகிவிட்டது. அதற்குப்பிறகு கட்டுவதற்கான ஏற்பாட்டை அரசு எடுத்திருக்கிறது.

அரிசன மாணவர்களுக்குப் படிப்பு உதவித் தொகை

* 462 **வினா.—திரு. எம். முத்தையா :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பின் தங்கிய மாணவர்களுக்கு ஸ்காலர்சிப் ரூ. 15-ம் ஹரிஜன மாணவர்களுக்கு ரூ. 5-ம் அரசாங்கம் உயர்த்தியுள்ளது உண்மையா ?

(இ) ஆம் எனின், அதன் காரணம் என்ன ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) & (இ) அரிசன மாணவர்களுக்கு அளிக்கப்பட்டு வந்த உண்டுறை உதவித்தொகை 1960-ஆம் ஆண்டு திருத்தி அமைக்கப்பட்டது. பின்தங்கிய மாணவர்களுக்கு 1960-ஆம் ஆண்டுக்கு முன்பு இருந்த தொகையே தொடர்ந்து அளிக்கப்பட்டு வந்தது. உண்டுறை உதவித்தொகையை உயர்ந்த செயற்குறிப்பு பரிசிலனையில் இருந்தபொழுது, பின்தங்கிய மாணவர்களுக்கும், அரிசனங்களுக்கும் உள்ள வித்தியாசம் தேவையில்லை என்று வலியுறுத்தப்பட்டது. ஆனால் பின்தங்கிய மாணவர்கள், தாழ்த்தப்பட்ட மாணவர்களைவிட பொருளாதார நிலையில் சற்று மேம்பட்டிருப்பதால் இருவருக்குமிடையே வித்தியாசம் இருப்பது தவறில்லை என்று அரசு கருதியது.

1971 டிசம்பர் 16]

பத்து ஆண்டுகளுக்கு மேலாக, உண்டுறை உதவித்தொகைகளை திருத்தி அமைக்காத காரணத்தால் இவ்வாண்டு முதல் கூடுதலாக கொடுக்க அரசு ஆணைப்பிறப்பித்துள்ளது. அதன் விவரம் பின் வருமாறு :

படிப்பு.	சென்னை. அரிசன பழங்குடி, குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட சாதியினர்.	சென்னை. பின்தங்கிய வகுப்பினர்.	மற்ற இடங்கள். அரிசன பழங்குடி, குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட சாதியினர்.	மற்ற இடங்கள். பின் தங்கிய வகுப்பினர்.
(1)	(2)	(3)	(4)	(5)
	(ஒரு மாதத்திற்கு அளிக்கப்படும் தொகை–ரூபாயில்)			
1 கலை, விஞ்ஞானம், சட்டம்.	70(60)	60(40)	55(50)	50(35)
2 தொழில் நுட்ப படிப்புகள் பொறியியல், விவசாயம், கால் நடை வைத்தியம் முதலியன.	75(70)	60(40)	70(70)	55(35)
3 தொழில் சம்பந்தப்பட்ட குறுக்குப் படிப்புகள் (எல். சி. இ.), எல்.எம். இ.) போன்றவை.	60(50)	50(40)	50(45)	45(35)

(அடைப்புக் குறிகளுக்குள் உள்ளவை, பழைய உதவித்தொகை விகிதம்)

ஆக கிட்டத்தட்ட 20 ரூபாய், 25 ரூபாய் வரை, முன் இருந்ததை விட ஒவ்வொரு இனத்திலும் உயர்த்தித் தரப்படுகிறது.

உதகை அரிசன மாணவ விடுதிக்குக் கட்டடம்

*** 463 வினா.—திரு. கு. அ. பொம்மன் :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்தில், உதகை நகரத்தில் அரிசன மாணவர்கள் உணவு விடுதி கட்டடம் கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அது எப்போது தொடங்கப்படும் ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) & (இ) 1971-72 ஆண்டில் விடுதிகளுக்கு கட்டடம் கட்டுவதற்காக ரூ. 2.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஐந்து இடங்களில் (உதகை உட்பட) கட்டுவதற்கு அரிசன நல இயக்குநர் பரிந்துரை செய்தார். அரசு கவனமாய்ப் பரிசீலனை செய்து உதகையில் இவ்வாண்டு கட்டிடம் கட்ட மேற்கொள்ளப்பட வேண்டாமென முடிவு செய்துள்ளது.